தமிழ்ச்சிட்டு
சிறுவர்
கலை இலக்கியத்
தென்மொழி
இணைப்பு
குரல் : 23
இசை : 5

காக்கைப் பள்ளிக்கூடம்

பறந்து வந்த காக்கை யெல்லாம்
பள்ளிக் கூடம் போட்டதாம்!
மறந்து போன பாட்டை எல்லாம்
மீண்டும் மீண்டும் கேட்டதாம்!



கழுத்தைச் சாய்த்துக் காதை வளைத்துக்
கவனத் தோடு நின்றதாம்!
எழுத்தில்லாமல் ஏடில்லாமல்
எல்லாம் கற்றுக் கொண்டதாம்!

நந்தன் வீட்டுக் கூரை மேலே
நாளும் வந்து கூடுமாம்!
குந்தி யிருந்து பாடம் படித்துக்
கூடிப் பறந்தே ஓடுமாம்!

இரையைக் கண்டால் காகா வென்றே
இனத்தைக் கூவி அழைக்குமாம்!
உரையைக் கேட்டே காக்கை எல்லாம்
ஒன்றாய் உண்டு பிழைக்குமாம்!

ஓய்வும் பயனும்!

ஓய்வாக இருக்கையில் தம்பி - நீ
ஓவியம் வரைந்து பழகு!
தூய்மையோ டமைதி சேரும்! - நன்கு
தோன்றிடும் உள்ள அழகு!

பாக்களும் இயற்றிப் பழகு - நல்ல
பாடலைப் பாடி மகிழ்வாய்!
தாக்குறும் துன்பம் யாவும் - இசைத்
தமிழினில் மாய்ந்து போகும்!

கதைகளும் எழுதிப் பழகு - பூங்
காவினில் உலவி வருவாய்!
புதைந்திடும் அறிவு வளரும் - மனம்
புதுக்கிடும் வாழ்வு பெறுவாய்!

அறிவியல் ஆய்வு செய்வாய் - நீ
அன்றாடச் செய்தி படிப்பாய்!
செறிவுறும் உன்றன் அறிவு - உளச்
செழுமையும் வலியும் பெறுவாய்!

மருத்துவ நூல்கள் கற்பாய் - உடன்
மனநூலும் தேர்ந்து கற்பாய்!
திருத்தமெய்ந் நூல்கள் அறிவாய் - வருந்
தீமையும் பொய்யும் களைவாய்!

பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

தனித்தமிழ்
சிறுவர் கலை இதழ்

"இன்றைய பயனோ
நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர்
நாளைய உலகம்!
நன்று செய்வதே
நமக்குநல் வாழ்க்கை
என்றும் அழியாது
இருப்பது புகழே!

-- பாவலரேறு

குரல் : 23, இசை : 5

தென்மொழி விடை 2031 (மே 2000) இதழின் இணைப்பு

நிறுவனர்
பாவலரேறு பெருஞ்சித்திரனார்

ஆசிரியர்:
தாமரை பெருஞ்சித்திரனார்

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
'தென்மொழி'
செந்தமிழ் அடுக்ககம்,
மேட்டவாக்கம் கூட்டுச்சாலை,
சென்னை 601 302.
தொலைபேசி எண் : 239 0231

குறியீடுகள்

நம்மில் சிலருக்குத் தங்கள் நெற்றிகளில் பட்டையைப் போட்டுக் கொள்ளுகிற பழக்கம் உள்ளது.

சிறிய அளவிலோ அல்லது நெற்றி நிறையவோ குறுக்குப் பட்டையாகவோ அல்லது நெடுக்காகவோ தீட்டிக் கொள்வர்.

இந்தப் பழக்கம் ஏதோ இவர்கள் பிறந்ததிலிருந்தே, உடன் பிறந்துவிட்ட பழக்கம் இல்லை.

நாம் இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் - எனவே இந்த மதத்தின் கடவுளை வழிபடுவதற்கான அடையாளங்களான இந்தக் குறியீடுகளை நாம் போட்டுக் கொள்ள வேண்டும் என்ற வகையில் மதத்தின் விளம்பரமாகவே நம்மிடையே பழக்கப்பட்டது இந்த மதக் குறியீடுகள்.

இந்து மதம் என்கிற மதத்தைச் சார்ந்ததால் ஒருவர் பட்டை அடித்துக் கொள்ளவும், கோடு (நாமம்) இழுத்துக் கொள்ளவும் செய்கிறார் என்றால், இன்னொருவர் கிறித்தவ மதத்தைச் சார்ந்தவர் என்பதற்காகக் குறுக்கை (சிலுவையை) மாட்டிக் கொள்கிறார். இசுலாமியர் வெப்ப நாடுகளிலும் கருப்பு மூடு போட்டுக் கொள்கின்றனர்.

ஆக, யார் எந்த மதத்தைச் சார்ந்தவர் என்பதற்கான ஒரு விளம்பர வண்டியாக நம் உடலைப் பயன்படுத்திக் கொள்கிறோம்.

பட்டை அடித்துகொள்வது அல்லது குறுக்கை மாட்டிக் கொள்வதன் வழி நாம் அந்த மதங்களுக்கு விளம்பரப் பலகைகளாகப் போனோமே.

பட்டை அடித்துக் கொள்ளுகிற ஒருவர் கிறித்தவத்தைச் சார்ந்தவராக இருப்பாரானால் அவர் பட்டை அடித்துக்கொள்ள மாட்டார் இல்லையா?

ஆக, மதக் குறியீடுகள் நம் அறிவை மழுக்கி நாம் இந்த மதத்தைச் சார்ந்தவர்கள் என நம்மை விளம்பரப் படுத்தச் செய்வதற்கன்றோ பயன்படுகின்றன!

மாடுகளுக்குள் அடையாளம் தெரிய வேண்டும் என்று அதன் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி வைப்பதற்கும், நாம்-மாந்தர்கள் மதக் குறியீடுகளை அணிந்து கொள்வதற்கும் பெரிய வேறுபாடு எதுவும் இல்லை தானே!

மதக் குறியீடுகள் - நம் அறிவைக் காட்டுகிற அடையாளப் பொருள் அல்லாதது போலவே, அது நம் அன்பைக் காட்டுகிற நம் உணர்வுகளைச் சொல்லுகிற அடையாளப் பொருளும் இல்லைதானே!

அப்படியில்லாத போது அறிவற்ற, மூடப்பழக்கமான இந்த நடைமுறையை அறிவு வளர்ச்சி பெற்ற மாந்தர்களாகிய நாம் ஏற்றுக் கொள்வது எவ்வளவு இழிவானது. மதக் குறியீடுகளா நம்மைக் குறியிடுவது?

இளைய உள்ளங்களே இவற்றை நாம் உணர்வது எப்போது?

சிட்டுக்கு

வந்த மடல்கள்

0 தமிழ்ச்சிட்டுக்கு மகிழ்ச்சியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். - ச.மா. அறிவுக்கண்ணு. உளுந்தூர்பேட்டை.

0 பாவலரேறு ஐயா அவர்களின் பாடல்கள் மிகவும் ஆழமான கருத்துடன் வழிகாட்டியாக அமைந்தன. தொலைக்காட்சி மற்றும் திரைப்படக் காட்சிகளின் தாக்கத்தினால் பொய்மைக் காட்சிகளை நம்பிப் பொங்கி எழவேண்டிய தமிழின இளம் தலை முறைகள் பொலிவு குன்றிக் காணப்படுவதை "நீ யாரைப் போன்றான்" - என்கிற ஆசிரியவுரையில் நயமாக எடுத்துக் காட்டிய தமிழ்ச் சிட்டின் பணி வரவேற்கத் தக்கது; பாராட்டப்படக் கூடியது.

- மா. சுந்தரமூர்த்தி, வாழ்நாள் சிறையாளி,
பாளையங்கோட்டை நடுவண்சிறை.

வௌவால்

வௌவால் ஒரு வியத்தகு விலங்கு. இது பறக்கிறது என்றாலும் இது விலங்கினத்தைச் சார்ந்தது; பாலூட்டும் வகையினதே ஆகும்.

குட்டி போட்டுப் பாலூட்டும் விலங்குகளில் பறக்கக் கூடியது வௌவால் மட்டும்தான்.

வௌவாலில் மிக நீளமான முன் கால் விரல்களையும் பின் கால்களையும் மெல்லிய சவ்வு போன்ற தோல் இணைத்துள்ளது. இத்தகு வியப்பான இறக்கையால் தான் வௌவாலால் பறக்க முடிகிறது.

வௌவால் உலகெங்கும் காணப் பெற்றாலும் வெப்ப மண்டலப் பகுதிகளில்தான் இவை அதிகம். மரங்கள், பாழடைந்த மண்டபங்கள்தான் இவை வாழ்கின்ற இடங்கள்.

வௌவாலின் நிறம் பொதுவாகக் கருப்பாயினும், சிவப்பு நிற வௌவால்களும் சில உண்டு.

வௌவாலின் உடல் முழுதும் மென்மையான முடி வளர்ந்திருக்கும். பின் கால் விரல்களில் வளைந்த உகிர் (நகம்) உண்டு. கொக்கி போன்ற இந்த உகிர்களால் கூரை, சுவர், மரக்கிளை முதலியவற்றைப் பற்றித் தொங்கியவாறே உறங்கும்.

வௌவாலின் கண்கள் மிகச் சிறியவை. ஆனால் அதன் காதுகள் பெரியன.

அவற்றின் கண்களின் பார்வைக் கூர்மையைவிடக் காதுகளின் கேள்விக் கூர்மை அதிகம்.

அதன் குரல் மிகவும் வலிவானது. இது வௌவாலிடம் மட்டுமே காணப்பெறும் வியப்பானதாகும்.

அதன் குரல் ஒலி நொடிக்கு 30 ஆயிரம் முதல் 70 ஆயிரம் அதிர்வுகளைக் கொண்டது. ஆனால் நம் காதுகளோ நொடிக்கு 20 முதல் 30 ஆயிரம் அதிர்வுகளைக் கொண்ட ஒலியை மட்டுமே கேட்கும் திறனுடையதானதால், **வௌவாலின் ஒலியை நம்மால் கேட்க முடிவதில்லை.**

இவ்வாறு ஒலி எழுப்பும் போது, அந்த ஒலி எதிரில் உள்ள பூச்சி, புழு மற்றும் பொருள்கள் மேல்பட்டு எதிரொலிக்கிற தன்மையைப் பொறுத்து அந்தப் பொருள்கள் எங்குள்ளன, எவ்வளவு தொலைலில் உள்ளன என்று வெளவால் அறிந்து கொள்ளுகின்றது.

இதன் அடிப்படையிலேயே இரவு நேரங்களில் வெளவாலால் பொருள்களின் இயல்பை அறிந்து விரைவாகப் பறந்து செல்லவும், எவற்றோடும் மோதிக் கொள்ளாமல் இருக்கவும் முடிகின்றது.

ஒரு வெளவாலின் ஒலியைக் கேட்டுப் பிறிதொன்று குழப்பம் அடைவதில்லை. ஒவ்வொன்றிலும் அதனதன் குரல் நன்கு தெரியும்.

பொதுவாக வெளவால் இரு வகையினது. ஒன்று பழந்தின்னி வெளவால். இதனை இலக்கியங்கள் வாவல் என்று குறிப்பிடுகின்றன.

மற்றது சிறு வெளவால். இதனைத் துரிஞ்சில் என்கின்றனர். இது சிறு சிறு பூச்சிகளை உட்கொள்ளும்.

வாவல் - எனும் முதல் வகையினது உருவில் பெரியதாக இருப்பதால், நரி போன்று முகமுடையதாகவும் இருக்கும்.

இது பழங்களில் உள்ள சாற்றை மட்டும் உறிஞ்சி உண்ணும்.

துரிஞ்சில் எனும் இரண்டாம் வகையினங்கள் இரத்தக் குறை நோய்க்கான மருந்தெனக் கருதப்பட்டு உணவாக ஏற்கப் படுகின்றன. இவ்வகை வெள வால்களில் சில வண்ண முடைய னவாகவும் உள்ளன. அவை பார்வைக்கு ஈர்ப்பானவை.

அமெரிக்கப் பகுதிகளில் வாழும் ஒருவகை வெளவால்கள் அந்நாட்டைப் போலவே குருதியை உறிஞ்சிக் குடிப்பன. ஆனால் அவையோ விலங்கின் குருதியை உறிஞ்சவல்லன.

சொல்லடை— விடை

1 கோ	டை	ம	ழை	2 பா	தி
டை	ப	ம்	3 செ	க்	கு
வி	4 கு	ர	ங்	கு	10 மி
டு	ட்	5 ப	கை	வ	ன்
6 மு	ற	ம்	ற	8 அ	ன
றை	9 ப	7 ப	க்	க	ல்

விண்மீன் குழுக்கள்

"இணையான நகர்வுகளில் இயங்கக் கூடிய விண்மீன் தொகுதிகள் நூற்றுக்குப் பக்கமாக இருப்பதை இப்போது கண்டு பிடித்திருக்கின்றனர்." என்று நம்பியின் தந்தை சொன்னவுடன் குழலி "அது குறித்து விளக்கமாகச் சொல்லுங்கள் ஐயா" என்றாள்.

"இன்றைக்கு நாம் தமிழ் மாதப் பெயர்களைப் பயன்படுத்துகிறோமே சுறவம், கும்பம், மீனம், என்று. . . அந்த பன்னிரண்டு பெயர்களும் விண்மீன் குழுக்களின் பெயர்களே."

இவற்றை நாம் 'ஓரை' என்று குறிப்பிடுகின்றோம்.

இந்த ஓரைகள் ஒவ்வொன்றும் ஏறத்தாழ ஓர் உருவ அமைப்பு கொண்டதாக இருப்பதால் அந்த ஓரைகளுக்கு அவ் உருவ அமைப்பின் பெயரையே வைத்துள்ளனர்.

சுறவம்	-	'சுறா' போன்றும்,
கும்பம்	-	குடம் போன்றும்,
மீனம்	-	மீன் போன்றும்,
மேழம்	-	ஆடு போன்றும்
விடை	-	காளை போன்றும்
ஆடவை	-	இரட்டையர் போன்றும்,
கடகம்	-	நண்டு போன்றும்
மடங்கல்	-	அரிமா போன்றும்,
கன்னி	-	இளம்பெண் போன்றும்,
துலாம்	-	துலாக்கோல் போன்றும்
நளி	-	தேள் போன்றும்
சிலை	-	வில் போன்றும்

அமைந்திருப்பதால் அந்த ஓரைகளுக்கு அந்த அந்தப் பெயர்கள் வைக்கப் பெற்றுள்ளன.

உலக அளவில் இதுவரை 1928ஆம் ஆண்டு முடிபுப்படி எண்பத்து எட்டு ஓரைகள் நம் கண்ணுக்குப் புலனாகியுள்ளனவெனக் கூறுகிறார்கள்.

இந்த ஓரைகளின் நகர்வுகளைக் கொண்டு அக்கால மக்கள் நாளையும் மாதங்களையும் வகுத்துக் கொண்டனர்.

உலக அளவில் அளவுபடுத்தி வரைந்து கொண்ட நிலக்கிடை (அட்ச)க் கோடுகள், நிலநெடுங் (தீர்க்க) கோடுகள் அனைத்தும் இந்த ஓரைகளின் போக்குகளைக் கொண்டே வரையப்பெற்றன.

நம் உலகத்தின் வட கோளப் பகுதியிலிருந்து கண்ணுக்குத் தெரிகிற இந்த விண்ணுலகத்திலும், தென் கோளப் பகுதியிலிருந்து கண்ணுக்குத் தெரிகிற இந்த விண்ணுலகத்திலும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

நம் உலகம் சுழல்கிற வட அச்சாக நமக்குப் புலனாகி இருக்கிற வட முனை (துருவ) விண்மீன் போன்று தென் முனை (துருவ) அளவில் தென் முனை (துருவ) விண்மீன் இல்லை.

இருப்பினும் வட கோளப் பகுதியில் காணப் பெற்றிருக்கிற ஓரைகளைக் காட்டிலும் தென் கோளப் பகுதியில் காணப் பெற்றிருக்கிற ஓரைகளின் எண்ணிக்கை அதிகமானவை.

- என்ற நம்பி தந்தையின் விளக்கம் குழலிக்கு மெதுவாகவே விளங்கியது.

கற்றுக் கொண்டால் என்ன ?

சிட்டு சிட்டு சிட்டு
சின்ன சின்ன சிட்டு
சிட்டைப் போலக் குறளும்
சின்ன சின்ன மொட்டு

பட்டு பட்டு பட்டு
பாவில் நெய்த பட்டு
பட்டைப் போலக் குறளும்
பாவில் நெய்த பட்டு

நான்கு சிட்டு முன்னே
நடக்கும் மூன்று பின்னே
ஏழும் சேர்ந்து நடிக்கும்
இனிய பாலைக் குடிக்கும்

சின்ன சின்ன தம்பி
சிட்டைப் போன்ற தம்பி
சின்ன சின்ன குறளைச்
சிட்டைப் போல நீயும்
கற்றுக் கொண்டால் என்ன
கண்கள் ஒளி மின்ன!

- *முனைவர் தமிழப்பன்.*

மொழிப்புலம் காப்பாய்

சின்னஞ் சிறிய தமிழ்ச்சிட்டே!
  சிறுகை யளவு தமிழ்ச்சிட்டே!
முன்னம் வந்தெம் வீட்டின்முன்
  முத்துத் தமிழை நீசிந்து!

பொன்னைப் போலுன் மினுமினுப்பு!
  பூவைப் போல மணமுனக்கு!
மின்னல் போல்கண் வெட்டுனக்கு!
  வீச்சால் பகையை நீநொறுக்கு!

தமிழ்வழிக் கல்வி இங்கிலையாம்;
  தமிழ்நாட் டினிலே இப்படியும்
உமிழ்ந்திடத் தக்க சிலநாய்கள்
  ஓங்கிக் குரைத்துக் கிடக்கின்ற!

அடித்து விரட்டக் கூட்டத்தை;
  அதற்கே பாடு நீபாட்டு!
படித்து வரட்டும் நம்பிள்ளை;
  பைந்தமிழ் பேசிப் பழகட்டும்!

என்மொழி, என்நாடு என்மக்கள்
  என்று தமிழர் ஓங்கட்டும்!
முன்மொழிந் துழைப்பாய் தமிழ்ச்சிட்டே!
  மொழிப்புலம் காப்பாய் தமிழ்ச்சிட்டே!

- *பாவலர் இளஞ்சித்திரன்.*

கணிப்பொறி



நாம் சிறு குழந்தையாக இருக்கும்போது, கணக்குப் போடுவதற்காக விரல்களை மடக்கி நீட்டி கூட்டலும் கழித்தலும் செய்வோம்.

பிறகு கரும்பலகையுடன் இணைந்த மணிச்சட்டத்தைப் பயன் படுத்திக் கூட்டல் கழித்தல் செய்திருக் கிறோம்.

அவ்வாறு பயன்படுத்திய மணிச் சட்டம்தான் இப்போதைய கணிப்பொறியின் முன்னோப் பொறி என்பது நமக்கு வியப்பாக உள்ளது.

கணிப்பொறி நம் மூளையின் வடிவத்தையும் இயக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட பொறி.

ஒரு காலத்தில் மிகப் பெரிய பொறியாக உருவாக்கப்பட்ட கணிப்பொறி நுண்ணளவினதாக உருவாக்கப்பட்ட வடிவம் தான் இப்போது நாம் காணும் வடிவம். நுண்செய்பொறி (MICRO PROCESSOR) என்ற வடிவில் உள்ள இப்போதைய கணிப்பொறி நம் மிசைமேல் வைக்கக்கூடிய அளவில் சிறுத்து விட்டது.

இதனினும் சிறிய கணிப்பொறிகள் நம் மடிமேலும், சட்டைப் பையிலும் வைக்குமளவிற்குகூட வந்துவிட்டன. மடி பொறி (Lap - tap) என்ற கணிப்பொயியை மடித்து நம் மடிமீது வைத்துக் கொண்டு இயக்கலாம் இயக்கிய பின் மடித்துத் தூக்கிக்கொண்டு செல்லலாம்.

கணிப்பான் என்று சொல்லக்கூடிய (Calculator) வகையைச் சார்ந்த பொறிகளுங்கூட இதன் ஒரு பகுதிப்பொறி வகையே.

மாந்த மூளை பல குறிப்பலைகளால் இயக்கப்படுகிறது. ஆனால் கணிப்பொறி இரண்டு குறிப்பலைகளால் மட்டுமே இயங்குகிறது.

இவ்விரண்டு குறிப்பலைகள் எண்களில் கூறுவதனால் 0, 1. இந்த இரண்டு எண்களை வைத்துக்கொண்டே தன் முழு இயக்கக்தையும் கணிப்பொறி அமைத்துக் கொள்கிறது. எனவே மாந்தமூளைபோல் மிக விரிந்த பரப்பில் கணிப்பொறி இயங்கமுடியாது. ஆனாலும் மிக விரைவாக இயக்கப்படுகிறது.

மூளைபோல் தசை இயக்கமில்லாமல் படிக அரைக் கடத்தி (Semi conductor) முறையில் இயக்கப்படுகிறது. எனவே எவ்வளவு விரைவில் இயக்கினாலும் திரும்பத்திரும்ப இயக்கினாலும் சோர்வுறாது ஒரே செயலையுட பன்முறையாகவும் விரைவாக இயங்குகிறது. இந்தமுறையில் மூளை இயங்கினால் சிறிது நேரத்தில் சோர்ந்து போகும்.

இந்தக் கூடுதல் தன்மையில் கணிப்பொறி இயங்குகிறது.

அதுவும் காசுக்காக

- மாரி. அறவாழி

"... விட்டு விடுங்க ஐயா! சின்ன பையன்..... போய்த் தொலைகிறான்...."

"நீங்க பேசாமெ இருங்க. . . எவ்வளவு திமிர் தெரியுங்களா இவனுக்கு.... ஒரு நாளா இரண்டு நாளா..... படிச்சுப் படிச்சுச் சொல்லியிருக்கிறேன்..... கொஞ்சமாவது நெஞ்சிலே அச்சமிருந்தா, மீறிகிட்டுச் செய்வானா....."

இப்படிக் கூறிவிட்டுத் தன் பிடிக்குள் சிக்கி நின்ற எலும்புச் சிறுவனை முரட்டுதனமாக அடித்து நொறுக்கினான். அந்தக் கொடுவாள் மீசைக்காரன்.

பையன் கதறித் துடித்தான். என்னால் அதற்கு மேலும் பார்த்துக்கொண்டு வாளாவிருக்க முடியவில்லை.

"...சரி சரி!.... மன்னித்துவிடுங்க ஐயா! என்னவோ அறியாப் பயல், தெரியாமல் செய்துவிட்டான்..."

"....இவனா அறியாப் பயல்?... இவனுக்கா இரக்கம்; நீங்களே பாருங்க... அந்த வாயில்லா உயிருங்க இவனை என்னா பண்ணிச்சு? அரக்கப் பயல்... அதுகளைப் போட்டு அடிஅடின்னு அடிக்கிறானே....."

மீசைக்காரன் காட்டிய இடத்தைப் பார்த்தேன்; அங்கே பத்து பதினைந்து வெள்ளாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன.

பையன்மேல் எனக்கும் சினம் பொங்கியது. வாயில்லா அந்த ஆடுகளை இவன் ஏன் அடிக்க வேண்டும்?..... குறும்புக்காரன்..... படட்டும்!

மீசைக்காரன்பால் எனக்கு ஒரு வகை மதிப்பு உண்டாயிற்று. ஆள் பார்ப்பதற்கு முரடனாக இருந்தாலும் அவனுள்தான் எவ்வளவு மென்மையான உள்ளம் அமைந்திருக்கிறது!

நகர்ந்தேன். மீசைக்காரனும் பையனை விட்டு விட்டான். அவன் ஆடுகளை நோக்கி ஓடினான்.

அடுத்த நாள் காலை.

காய் வாங்கி வருவதற்காக அங்காடிக்குச் சென்றிருந்தேன். வாங்கிக்கொண்டு திரும்புகையில் புலால் உண்ணும் நண்பர் ஒருவர் எதிரில் வந்தார். வந்தவர் என்னைத் தடுத்து,

"வாருங்கள்... நானும் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன். இருவரும் சேர்ந்து போகலாம்..." என்று கூறி என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். இருவரும் புலால் கடைக்குச் சென்றோம்.

நான் அந்தக் கடைக்காரனைப் பார்த்துத் திகைத்து நின்றேன்.

அவன் வேறு யாருமல்லன்; நேற்று நான் கண்ட இரக்க நெஞ்சம் படைத்த மீசைக்காரன்தான்!

"அடடா! கறிக்கடைக்காரனா இவன்?... இவனுக்கா அவ்வளவு இரக்கம்!... ஆடுகளை உயிரோடு கொலை புரியும் இந்த முரடனுக்கா வாயில்லா உயிர்களின்மேல் அத்துணை அன்பு!"

வியப்புடன் நின்றிருந்தேன். கடைக்காரன் ஓர் ஆட்டுத் தொடையை வெட்டி எடுத்து எடை போடப் போனான்.

நண்பர் அதற்குள் குறுக்கிட்டு 'அது வேண்டாம் ஐயா!... நோய் பிடித்த ஆடுபோல் இருக்கிறது! கறி எப்படியோ தடிப்புத் தடிப்பாய் கன்றிப் போயிருக்கிறதே....' என்று கூறினார். அதற்கு அவன்,

'..... இல்லீங்க! ..... கறியிலே ஒரு குத்தமும் இல்லீங்க..... நல்ல ஆடுதான்!..... நேத்து நம்ம வேலைக்காரப் பயல் மேய்க்கும்போது இந்த ஆட்டைக் கழியாலே அடிச்சிட்டான். அதனாலேதான் கறி கன்னிப்போய்த் தடிப்பாய் இருக்குது.... மத்தப்படி நோய்கீயெல்லாம் ஒண்ணுமில்லைங்க.....'

கறியை வாங்கிக் கொண்டு நண்பரும் நானும் நடந்தோம். அப்போதுதான் எனக்குப் புரிந்தது, கறிக்கடைக்காரன்கூடத் தான் அறுக்கப்போகும் ஆட்டிடம் ஏன் இரக்கம் காட்டுகிறான் என்று!

இந்த உலகில் எல்லாமே காசுக்கா இருக்கும்போது, இரக்கம் மட்டும் சும்மா கிடைத்துவிடுமா? (இருப்பு: 'புதைமணல்')

தமிழ் மண்ணின் பழமொழிகள் சில . . .

- அட்டை செத்தால் குட்டைக்கு இழப்பா?
- அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
- ஆற்றில் கரைத்த புளியும், அங்காடிக்கிட்ட பதருமாயிற்று.
- நரிவாலைக் கொண்டு கடல் ஆழம் பார்ப்பதுபோல்
- நாவைச் சுற்றிப் பிடிக்கிற தாகத்துக்கு நாள் கேட்டானாம் கிணறு வெட்ட
- ஆமை கிணற்றிலும், அணில் கொப்பிலும்
- இறைத்த கிணறு ஊறும்; இறையாத கிணறு நாறும்.
- பாய்ச்சலும் வேண்டும். காய்ச்சலும் வேண்டும்
- ஏரிப் பெருகில் எங்கும் பெருக்கு
- கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகுமா?
- கிணற்றைத் தூர்த்தால் வயிற்றைத் தூர்க்கும்
- தொலைவுத் தண்ணீர் தொல்லைக்கு வராது.
- நீரடித்து நீர் விலகாது.

த.நா. தலைமை அஞ்சலகத் தலைவர் 655/2000 செ.ப. (ஆர்.என்.)எண் : 8119/63
டி.என்.சீப் பி.எம்.சி 655/2000 செ.ப. (ஆர்.என்.)எண் : 8119/63 தென்மொழி இணைப்பு

சொல்லடை

1				2	
			3		
	4				10
		5			
6				8	
	9	7			

இடமிருந்து வலம்

1. வேனிற்கால வெப்பம் தணிய இது தேவை (4)
2. ஒன்றை இரண்டாகப் பிரித்தால் கிடைப்பது
3. வ.உ.சி. சிறையில் இதை இழுத்தார்.
4. நம்முடைய மூதாதைய இனம் (4)
5. தமிழர்கள் இவனிடமும் அன்பு காட்டுவார்கள்
6. புறநானூற்றுத் தமிழச்சி புலியை இதனால் விரட்டினாள் (3)
7. 'தேதி' என்கிற வடமொழிச் சொல்லுக்கு தூய தமிழ்ச் சொல்.

வலமிருந்து இடம்

3. சீன மக்களை விடுவித்த படை
4. எட்டப்பார்வையைச் சரிசெய்ய இந்தவகை ஆடி பயன்படுகிறது.
5. காஞ்சி என்றாலே நினைவுக்கு வருவது.
8. திருக்குறளில் முதற்பால்
9. போர்க்குணமிக்க இசைக்கருவி

மேலிருந்து கீழ்

1. பள்ளிக்கூடங்களுக்கு இப்போதெல்லாம் இது நடக்கிறது.
2. வெற்றிலையோடு போடுவது (3)
3. செங்கழுநீர்ப்பட்டு (செங்கற்பட்டு) என்பதன் சுருக்கப் பெயர். (3)
10. இடி, மழையோடு வானத்தில் 'பளிச்'செனத் தெரியும்

கீழிருந்து மேல்

7. சுறுசுறுப்பாக வேலை செய்பவரை இப்படிச் சுற்றுவதாகச் சொல்வார்கள் (5).